# நியமனமுறை தீது தீதுதான்!

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (12—9—49) வெளியூர் (13—9—49) [ இதழ் 34

## ஆங்கிலேயர்கள் செய்தால் அதர்மம்! ஆளவந்தார்கள் செய்தால் - தர்மமா?

### காந்திய வழியுமல்ல—ஜனநாயகக் கோட்பாடுமல்ல!

### திருச்சி ஜில்லா போர்டும்-பம்பாய் சட்டசபையும்!

தங்களுக்கு வெற்றி தேடிக் கொள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொருமுறையை மேற்கொள்ளுவர். அன்புகாட்டி ஆதரவு தேடுவது, அச்சமூட்டி வெற்றி பெறுவது என்னும் இரண்டு முறைகள் உண்டு. சொந்தப்புகழ் -பணலாபம் மட்டும் வேண்டி நிற்போர், தேவையானதைப் பெற, அன்பு முறையில் நாட்டம் கொள்ளமாட்டார்கள். அதன் வன்மையில் அவர்களுக்கு நம்பிக்கையும் இருப்பதில்லை. எனவே, அவர்களில் பெரும்பாலோர், தமது தேவைகளைப்பெறுவதற்கு, அவசியம் இருந்தாலும் இல்லாமற்போனாலும், அதட்டிப்பேசுவதும், அச்சுறுத்தி மிரட்டுவதும், கூலிக்கு ஆள்பிடித்துப் பிறர்மீது ஏவுவதும், சிறந்த முறைகள் எனத்தீர்மானித்து, அடியாட்களை உண்டாக்கி ஆதரித்து வருவர். ஆரம்பத்தில் இந்த முறை, நல்ல பலனைக் கொடுக்கத்தான் செய்யும். ஆனால், நாள் செல்லச் செல்ல, அடியாட்களை ஏவி எதனையும் சாதித்துக்கொள்ள முடியும் என்ற தவறான எண்ணத்தால், அடியாட்களை ஏவும் அதட்டல் போவழிகளின் அடாதசெயல், அளவுகடந்து நிற்கும். பிறரை அச்சுறுத்தவும் தமது முன்னேற்றத்திற்கு இடைஞ்சல் விளைவிப்பவர்கள் மீது ஏவவும் என்று மேற்கொண்டமுறை, தங்கள் உள்ளத்தில் தகாத விருப்பங்களை எல்லாம் ஏற்படுத்தவும், அவைகளை அடைய ஆர்வத்தைத் தூண்டவும், அதன் வெற்றிக்கும் அதே அடியாட்களை ஏவும் முறையைக் கையாளவுமான முடிவைக் கொடுத்து விடலாம். இறுதி, வெற்றியாகத்தான் இருக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. அழிவு, அதிக அளவில், தங்களுடைய நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்டவர்கள் பட்ட வேதனையைக் காட்டிலும், கூடுதலாக அனுபவிக்கவேண்டிய தன்மையில் இருக்கும்.

இது காட்டு ராஜா முறை என்று எவரும் கூறுவர். ஆனால், இன்று எல்லாத் துறைகளிலும், இந்த அச்சுறுத்தல் முறைஇருக்கிறது. ஆனால் தரத்திலும், தன்மையிலும் உருவத்திலும் மாறுதல் பெற்றிருக்கிறது. காலவேகத்தை அனுசரித்து, மக்களின் விழிப்புணர்ச்சியைத் தெரிந்து கொண்டு. இந்தவெறுக்கத் தகுந்த-விரும்பத்தகாத முறைகளை,-தனி நபர்கள் கூட, இன்று மேற்கொள்ள அஞ்சுகிறார்கள். கூடிய வரையில், தங்கள் உயர்வுக்காக, இந்த ஆபத்தான முறைகளை மேற்கொள்வது கூடாதென புத்தி பெறுவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தனி நபர்கள், இந்தக் கூலிக்கு ஆள் பிடிக்கும் போக்கை மறந்து அந்த

போதிலும், பொதுவாக அரசியல் கட்சிகள் குறிப்பாகக் காங்கிரஸ் கட்சி,—அகிம்சையைப் பற்றி வானளாவப் பேசி வந்த போதிலும்-இம் முறையை மேலும் மேலும் மேற்கொள்ளும்பணியில்நாட்டம் செலுத்தி வருகிறது. நாட்டுக்கு, இந்தப் போக்கு, நலம் செய்யாது-தீமையையே தோற்றுவிக்கும். என்ன செய்வது! நிற்க.

தனது ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்வதற்காக, இதே கூலிக்கு ஆள்பிடிக்கும்முறையை மேற்கொண்டு வந்திருக்கிறது ஏகாதிபத்தியம். தாங்கள் அன்னியர் என்ற காரணத்தால், நாட்டு மக்களை நம்பாமல், நாட்டில் தங்கள் ஆட்சிக்கு ஆதரவு இருப்பதாகக் காட்டிக்கொள்ள, தங்கள் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாதவர்களாகத் தேடிப் பிடித்து, பின்னணியில் உள்ள மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கிறோம் என்று சாக்குக் கூறி,-தமது ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள-அடியாட்களை உற்பத்திச் செய்து அ[illegible]வெறியர்கள், ஆதரித்துவருவது[illegible] நாட்டு மக்களில் சிலருக்குப் பட்டம் பதவிகொடுக்கும் முறையை இந்த நாட்டில் ஆங்கிலேயர்கள் மேற் கொண்டனர். இந்த வகையைச் சேர்ந்ததுதான், சட்டசபைகள், ஸ்தல ஸ்தாபனங்கள், கமிட்டிகள் முதலியவற்றிற்கு; ஏகாதிபத்திய ஆட்சி கைக்கொண்டிருந்த நியமன—'நாமினேஷன்' முறை. ஆதிக்க வெறியர்கள் கூலிக்கு ஆள் பிடிக்கும் உணர்ச்சிக்கும், ஏகாதிபத்தியத்தின் நியமன உணர்ச்சிக்கும்,—தன்மையிலும், தரத்திலும் வேற்றுமை இருந்தாலும் — அடிப்படையில் வேற்றுமை ஒரு துளியும் கிடையாது. இந்த நியமன முறைக்கு, அன்று காங்கிரஸ் கட்சியினர் காட்டிய எதிர்ப்புணர்ச்சியை, எழுத்துகளால் எடுத்துக் காட்டுவதென்பது முடியாத காரியம். கோபித்தது-கொக்கரித்தது, ஏகாதிபத்தியச் செயல் கண்டு, காங்கிரஸ் கட்சி. நியமனம் பெற்ற உறுப்பினர்களை, பிரபுக்களின் சிருஷ்டிகளான அடியாட்களைக் காட்டிலும், மட்டரகங்கள்—சமுதாய எதிரிகளெனப் பொருள்படும்படி-ஏன்-அதனிலும் விரிவான பொருள் தரக்கூடிய. மக்களைக் காட்டிக் கொடுக்கும் 'தேசத்துரோகி' என்று இழித்துப் பழித்துக் கூறியது காங்கிரஸ் கட்சி.

இந்த நியமனத் துறையில், காங்கிரஸ்கட்சி இன்று அதிகாரத்தில் இருந்துகொண்டு என்ன செய்கிறது? நியமனம் செய்யும் முறையை, எந்தக்கண்கொண்டு காங்கிரஸ் பார்க்கிறது? நியமனம்

[ தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க

## பற்றுக் குறை ஒப்பாரி ஒழியாதா?

### சேப்பங்கிழங்கைத் தின்று சோற்றை மறக்க வேண்டும்

இவ்வாண்டு 30 லட்சம் டன் உணவு பற்றுக்குறையாக இருக்கும் என்று இந்திய அரசாங்க உணவிலாகா டைரெக்டர் குறிப்பிட்டுவிட்டு, அனைவரும் அரிசி உபயோகத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்றும் இதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறினர். இப்பற்றுக் குறைக்குக் காரணம் கூறுகையில், 1949-ல் 32 கோடியாக இருந்த நம்நாட்டு ஜனத்தொகை இப்போது $33\frac{1}{4}$ கோடியாக உயர்ந்துவிட்டது என எடுத்துக் காட்டினர்.

மாக்கள் தொகை உயர உயர உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் வேலையும் அதற்கேற்றவாறு வளரும்படிசெய்யவேண்டியது யாருடைய பொறுப்பு? இதனை அரசாங்கம்—இந்தியர் ஆட்சி—கவனிக்கவில்லை என்றால் அது யாருடைய தவறு? இந்தியா விடுதலைபெற்று—இந்த இரண்டு ஆண்டுக்காலமாக, இந்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் வளரும் மனித வர்க்கத்தைக் கவனத்திலிருத்தி, உணவுவகையையும் அதற்கேற்றபடி பெருக்க ஏன் வழிசெய்யவில்லை?

போகட்டும்; கடந்தகாலத்தில் தான் செய்யவில்லை. இப்போதேனும் செய்கின்றார்களா? பற்றுக்குறை பற்றுக்குறை என்று ஒப்பாரிவைப்பதைவிட்டு, நாட்டிலே அரசாங்கமே முன்வந்து கடந்த 2 ஆண்டுகளாகப் பயிரிடப்படாமல விடப்பட்டிருந்த நிலங்களையெல்லாம் ஆக்ரமித்து ஏன் பயிர் செய்ய முனைதல் கூடாது? காட்டு நிலங்களைப் பண் படுத்திப் பயிர் விளையும் நிலங்களாக்கும் முயற்சியில் ஏன் ஈடுபடுதல் கூடாது? எவவளவு நாளைக்குத்தான் பற்றுக்குறைப் பாட்டைப்பாடிக்கொண்டிருப்பர் இந்த அதிகாரிகளும் மந்திரிகளும்!

அரிசி சாப்பிடுவதைக் குறையுங்கள என்கிறார் ஒருவர்.

வள்ளிக்கிழங்கையும் வாழைப் பழத்தையும சாப்பிட்டுச் சோறு சாப்பிடுவதை மறந்து விடுமாறு மற்றொரு மந்திரி தெரிவிக்கிறார்.

வாரத்திற்கு ஒரு வேளை சாப்பிடாமல் இருந்தால் பற்றுக்குறையைச் சரிக்கட்டி விடலாம் என்று இந்தியாவின் 26 பிரபலஸ்தர்கள் கை யொப்ப மிட்டு மக்களுக்கு வேண்டு கோள் விடுக்கின்றனர்.

தமிழகத்திலே ஏழை மக்கள் வாரத்திற்கு ஒரு வேளையல்ல. நாடோறும் ஒரே வேளை சாப்பிடும் நிலையில் தானே இன்றைய உணவு நிலைமை இருக்கிறது! வேண்டுகோளில் கையெழுத்திட்ட பணக்காரர்களுக்கு நாட்டு ஏழை மக்கள் நிலை எப்படித் தெரியப் போகிறது!

மத்திய அரசாங்கஉணவுமந்திரி சபையின் அதிகாரி திரு.ஸ்ரீராம் என்பவர் "பையன்களும் பெண்களும் தங்கள் தோட்டங்களில் வாழை அல்லது பப்பாளி மரங்களை நட்டு அவற்றில் விளையும் பழ வகைகளைத் தாங்களே தின்னலாம். ஒவ்வொரு பையனும் பெண்ணும் அரிசி—கோதுமை உணவுகளைக் குறைத்துக் கொண்டு, வாழை, பலா, மா. பப்பாளி, நாவற்பழம் முதலியவற்றைத் தின்னலாம். வள்ளிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, காட்கிழங்கு, காய் கறிகளைப் புசிக்கலாம். வேர்க்கடலைப் பிண்ணாக்கையும் சிறிது சேர்த்துக் கொள்ளலாம்" என்கிறார்.

பற்றுக் குறையைப் போக்க எப்படிப்பட்ட யோசனைகளை அதிகாரிகள் வெளியிடுகிறார்கள் பார்த்தீர்களா?

ஏன் இத்தகைய பிரசாரமெல்லாம்? மழை பெய்யாத ரஷ்ய நாட்டில் உணவுப் பஞ்சமற்ற நிலையில் மக்களனைவரும் வயிறார உணவு உட்கொள்ள வழியிருக்கையில நம் நாட்டில் மட்டும் கால மழை பெய்யாமையால கடும் பஞ்சம் என்ற சாக்கைக் கூறுவதேன்? ரஷ்யர்கள் கையாளும் பயிரிடுதல் முறைகளை நாம் பயின்று ஏன் கையாளுதல் கூடாது? விளையக்கூடிய நிலங்களில ஒரு சிறுபகுதியேனும் விளைச்சலுக்கு முடியலாத படி விட்டு வைத்திருக்கும் கொடுமையை அகற்ற ஏன் முனையக் கூடாது? இவற்றையெல்லாம் செயலில நடத்த அரசாங்கம முன் வந்தால பற்றுக் குறைப் பேச்சுக்கு இடமில்லை அல்லவா? வேலை செய்வதைவிட்டு வீணிற் பேச்சில் காலத்தைச் செலவிடுவதால [illegible] கூடிய பலன் என்ன?

## இடைக்காலத்தில் ஒரு குட்டி பார்லிமெண்டு!

### காங்கிரஸ் கோட்டையாக அமைக்க யோசனை!

வருகிற நவம்பர் மாதத்தோடு. புதிய அரசியல் அமைப்புச் சட்டம் மூன்றுமுறையாக நிறைவேற்றப் பட்டுவிடும். வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கியுள்ளபடி, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பார்லிமெண்டு, பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன், இடைக்காலத்தில், ஒரு குட்டி பார்லிமெண்டை சிருஷ்டித்து, அரசியல அதிகாரம தஙகள் கைகளை விட்டு நழுவி விடாமல் பார்த்துககொளள, காங்கிரஸ் மேலிடம் யோசித்துக் கொண்டு இருக்கிறதாம். இநத இடைக்கால அமைப்புக்கான, ஒரு தீர்மானததை அரசியல் ஆகக மன்றததில கொண்டு வநது நிறைவேற்றிவைககப் படுமாம். இநதிய குடியரசின் முதல் தலைவரையும தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுமாம். 6-1-1950 முதல் இநத இடைககால இந்தியககுடியரசு அதிகாரத்திற்கு வருமாம். இதற்கு உறுபபினாகளான 312 நபாகளில், மாகாண சட்டசபை உறுப்பினர்களில் இருந்து பெரும பான்மையோர் பொறுககி எடுத்துக் கொள்ளப்படுவார்களாம். சுதேச சிற்றரசுகளின் பிரதிநிதிகளை, அந்தந்த சிற்றரசுகளில் உள்ள மநதிரி சபையினர், நியமனம் செய்வார்களாம்.

இது நலல ஏற்பாடு என்பதில் சந்தேகமில்லை! ஆனால், யாருக்கு? காங்கிரஸ் கட்சிககு! எதேச்சாதிகாரத்துக்கு!

காங்கிரஸ் கடசிககு இது ஒரு வெற்றி! மககளாட்சி கோட்பாட்டுககு, இது ஒரு தோல்வி! மகத்தான தோல்வி!!

மாலை மணி

சென்னை 12—9—49 திங்கட்கிழமை

# படையெடுப்பின் மேல் படையெடுப்பு!

எந்தக் காலத்திலும், எந்தக் கருத்தைப் பரப்புவதற்கும், பிரசாரம் சிறந்ததோர் சாதனமாகும். ஒலி உணர்ந்த அந்தக் காலத்திலிருந்து, வானொலியின் மூலம் விஷயத்தை விளக்கும் இந்தக் காலம் வரையில், பிரசார முறைகளில் புரட்சிகரமான மாறுதல்கள் பல ஏற்பட்டு, சமூகத்தில்-விலக்கமுடியாத—முக்கியமான முதன்மை இடத்தைப் பெற்றிருக்கின்றன, பிரசார சாதனங்கள். அவைகளின் தேவைகள், நாளுக்குநாள் வளர்ந்து வருவதோடு, அவைகளுக்குள்ள பிரசார பலமும் பன்மடங்காகப் பெருகி விட்டிருக்கின்றன. இத்தகு பிரசார சாதனங்களில் சிறந்ததாக உள்ள இரண்டொன்றில், பத்திரிகை மிக மிக முக்கியமான சாதனமாகும்.

பத்திரிகைகளின் சக்தியும், தன்மையும் தெரிந்துகொண்டிருக்கிற காரணத்தினால்தான், இந்த நாட்டில் உள்ள ஆலை அரசுகள், ஏற்கனவே செல்வாக்குப் பெற்றுள்ள பத்திரிகைகளை, ஆங்கிலேயர்களோ அன்றி உள்நாட்டவர்களோ எவர் நடத்தி வருவதாக இருந்தாலும், போட்டி போட்டுக் கொண்டு வாங்குவதில் முனைகிறார்கள். புதுப்புது பத்திரிகைகளை ஆரம்பிப்பதிலும், பல நிறங்களைக்கூட்டி மக்கள் கவனத்தை ஈர்ப்பதிலும், பெரிதும் ஈடுபடுகிறார்கள் பண மூட்டைகள். இன்று பத்திரிகைத் தொழில் பணங்காய்க்கும் மரமாக மாறிக்கொண்டு வருகிறது.

தங்களின் இஷ்டத்திற்கு மாறாக—இலாப வேட்டைக்கு விரோதமாக — அரசாங்கம் எந்த நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், மக்களின் வாழ்வு நலியுமென்று புனைந்து கூறி, அரசாங்கத்திற்கு எதிராக, மக்களை ஏவிவிடும் முறையில தீப்பொறி பறக்க எழுதுவதும், தங்கள் பணவேட்டைக்கு அரசாங்கம் ஆதரவு காட்டினால், அதனால் ஏற்படும் நன்மைகள் அனைத்தும் மக்களின் வாழ்க்கை உயர்வுக்குத்தான் என்று, நயமான வார்த்தைகளை இதமாகப் பேசி-மக்களை மயங்கச் செய்வதும், அரசாங்கத்தின் கட்டளைகளை கண்ணை மூடிக்கொண்டு மக்கள் பின்பற்றவேண்டுமென்று கனிவாகப் பேசுவதும், பண மூட்டைகளின் பத்திரிகைகளால் சிறப்பாக முடியும்.

இந்த நாட்டு முதலாளிகளைப் பொறுத்த வரையில், தேவையான அளவிற்குப் பிரசார சாதனங்களைக், குமரிமுனை முதல் காஷ்மீர்வரை கைப்பற்றியாகி விட்டது. இந்திய அரசாங்கம் இன்று, அந்தப் பிரசார இயந்திரத்திற்கு அஞ்சி, ஆலை அரசுகளுக்கு எதிராக வேண்டா வெறுப்பாக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளில் இருந்து எத்தனையோ முறை பின் வாங்கி இருக்கிறது. விளக்கம் வேண்டாத விஷயம் இது.

இத்துறையில் புதிய நேரர் ஆபத்து இத் துணைகண்டத்திற்கு ஏற்பட்டு இருக்கிறது, அமெரிக்காவின் டாலர் படையெடுப்பு, போர்ப் பிரகடனமில்லாமல்—முரசம் அறையாமல், இந்த நாட்டில் புகுந்து விட்டது-மேலும் புக-பெரிய அளவில்—திட்டம் தீட்டப்பட்டாய்விட்டது. எதிர்ப்பு ஒரு துளியும், இதற்குக் கிடையாது. எதிர்க்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள், வெள்ளைக் கொடி காட்டி, வெண்சாமரம் போட்டு வரவேற்கிறார்கள். வேதனையை, விலை கொடுத்து வாங்கி ஆகிவிட்டது. அதுவும், நாட்டு மக்களின் நல்வாழ்வு, விலையாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது, கண்ணைக் கொடுத்துச் சித்திரம் வாங்கும் கதை போல!

இந்த டாலர் படையெடுப்பின் பணி—கடமை—ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், இதற்கு நாட்டு மக்களின் நம்பிக்கையை—ஆதரவை—அமோகமாகப் பெற வேண்டுமானால், இந்தப்படையெடுப்பின் உண்மையை மறைத்தும் திருத்தியும், இத் துணைக கண்டத்து மக்களுக்குக் கூறியாக வேண்டும்! அமெரிக்காவின் நல்லெண்ணத்தையும், இந்த நாட்டு மக்கள் பால் அமெரிக்கா வைத்துள்ள வாஞ்சையையும், அழகுபட நமக்குத் தந்தாக வேண்டும்! அதிகம் கூறுவானேன்? அமெரிக்காவின் டாலர் படையெடுப்பால், எல்லாத் துறைகளிலும், எதிர்காலத்தில இந்தநாட்டு மக்களுக்கு வரவிருக்கும் கேடுகள் அனைத்தையும் மறைத்து, நேர்விரோதமாக, மக்கள் மயங்கும் முறையில் பேசியாக வேண்டும். அதற்காக, இந்திய முதலாளிகளின் பிரசார இயந்திரத்தை நம்புவதில், அதிக பலன் ஏற்பட முடியாது. எனவே, அமெரிக்காவே முதல் போட்டு முதல்தரமான பிரசார சாதனங்களை, இந்த நாட்டில் அமைத்துக் கொள்ள வேண்டியது அமெரிக்காவின் நீங்கக் கடமையாகிறது. இந்த முடிவின் பலனாக அமெரிக்காவிலிருந்து பத்திரிகை நிபுணர் ஒருவர் வந்து இருக்கிறார். இந்தியா, பாக்கிஸ்தான் உள்பட, நிலையான அரசு அமைந்துள்ள ஆசிய நாடுகளில் எல்லாம் பத்திரிகைகளை வாங்கி நடத்துவது என்ற நோக்கத்தோடு, அவர் முயற்சிக்கிறார்.

பாக்கிஸ்தானில், லாகூரிலும் கராச்சியிலும் ஓரேகாலத்தில் பிரசுரிக்கப் பட்டு வருவதும், 79 வயதுடையதுமான, செல்வாக்குள்ள 'தி சிவில் அண்டு மிலிடரி கெஜட்' என்ற ஆங்கில தினசரியை, அவர் வாங்கி இருக்கிறார். இந்திய யூனியனிலும் வாங்க முயலுகிறார். இதற்கு இங்குள்ள பத்திரிகை உரிமையாளர்களை ஒத்துழைக்கவும் கேட்டுக் கொள்ளுகிறார்.

ஒன்றுக்கு, இரண்டுமடங்கு மூன்று மடங்கு என்று விலை கொடுத்தால், இந்த நாட்டில் பல பத்திரிகைகளை அமெரிக்காவால் வாங்கிவிட முடியும். அதற்கான சக்தி அமெரிக்காவிற்கு உண்டு. அதற்கு அவசியமும் இருக்கிறது.

இந்த நாட்டில் பத்திரிகைகளை வாங்க, முதல் போடுகிற அமெரிக்கர்களின் பெயர்களை வெளியிட, இங்கு வந்துள்ள அமெரிக்கருக்கு விருப்பமில்லை. இங்குப் பத்திரிகை நடத்த-ஆர்வங்கொண்டுள்ள அமெரிக்கர்களின் பெயர்களைக் கூறாமல் மறைப்பதிலிருந்தே, அமெரிக்காவின் முயற்சியில் சந்தேகம் எவருக்கும் ஏற்படுவது இயல்பாகும். மார்கோலின் கூறுவது போல, அமெரிக்கர்கள் நல்ல நோக்கத்தோடுதான் இந்த நாட்டில பிரசார சாதனங்களை பெற முயற்சிக்கிறார்கள் என்பது முழு உண்மையானால், அப்படி ஆசைகொண்டுள்ள அமெரிக்கர்களின் பெயர் கூற அவர் ஏன் அஞ்ச வேண்டும்? நபர்களின் பெயர்களைக் கூறினால், அவர்களின் அந்தஸ்தைக்கொண்டு, அவர்களுடைய நோக்கம் எதுவாக இருக்கமுடியும் என்பதை ஐயமறத் தெரிந்துகொள்ள முடியும். இங்கு, அவர்களால நடத்தப்படும் பத்திரிகைகளின் போக்கு எவ்வாறு இருக்க முடியும் என்பதையும் யூகித்துக்கொள்வது[illegible]மாகும். எதைக் கூறாததினால், எந்த உண்மையைத் தெரிந்து கொள்ள முடியாதென்று கருதுகிறாரோ அந்த அமெரிக்கா, அந்த உண்மை, அவர் மறைப்பதின் மூலமே வெளியாகி விடுகிறது.

நிர்வாகம், கொள்கையை நிர்ணயம் செய்வது அமெரிக்கர்கள் கையிலும், பெரும்பாலான எழுத்து வேலைகள் எல்லாம் இந்திய எழுத்தாளர்கள் கையிலும் இருக்குமென்று அந்த அமெரிக்க ஆசிரியர் குறிப்பிடுகிறார். இங்கு எழுத்தாளிகளுக்கும் பஞ்சம் கிடையாது. கூடுதலாக-அதிகமாகக்கூட அல்ல—பணம் கொடுத்தால், நூற்றுக் கணக்கில் எழுத்தாளிகளின் மனுக்கள், அமெரிக்கப் பத்திரிகை அலுவலகங்களில் நிரம்பி விடும். அமெரிக்காவிற்கு வேண்டுமானால்கூட, அவர் இஷ்டப்பட்டால், அவர்களில் பலரை ஏற்றுமதி செய்யலாம். அந்த அளவில் படித்துப் பட்டம் பெற்றவர்கள், இங்கு வேலையில்லாப் பஞ்சத்தால பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்! அமெரிக்க ஆசிரியருக்கு, எழுத்தாளிகள், இங்குக் கிடைக்க மாட்டார்களே என்ற கவலை துளியும் தேவை இல்லை!

இந்த நாட்டில் பத்திரிகையில முதல் போட விரும்புகிற அமெரிக்கர்களுக்கு, 'அகில உலகப்பார்வை, ஏற்பட்டு இருக்கிறதாக, அமெரிக்க ஆசிரியர் கூறுகிறார். ஏன் ஏற்படாது? அமெரிக்கர்களின் 'அகில உலகப் பார்வை'யின் இலட்சணத்தை தெரிந்துகொள்ள சீனாவின் வரலாறு ஒன்றே போதுமானது. இந்தியாவும், அந்த 'அகில உலகப் பார்வை'யை கண்டுகளிக்கத்தேவை இல்லை. இந்த எண்ணம் டெல்லி மேலிடத்தார்களுக்குத் தோன்றினால், இந்த அமெரிக்க 'அகில உலகப்பார்வை'யில் சிக்கிவிடாமல், இந்த நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

அமெரிக்காவின் முதல்படையெடுப்புக்கு—டாலர் புகுதலுக்கு, வரவேற்பு கூறிவிட்டவர்கள், இதற்கு மட்டும் இணங்க மறுப்பார்கள் என்று எப்படி நம்ப முடியும்? இரண்டாம் படையெடுப்புக்கும் எதிர்ப்பு இருக்காது. அமெரிக்காவின் இரண்டாம் படையெடுப்பும், கொட்டு முழக்கோடு. விரைவாக வரட்டும்!

இந்த நாட்டில் ஆள்வோர் மட்டுமில்லை—மக்கள் உள்ளனர். மக்கள் மரக்கட்டைகள் அல்ல—மாமிச மலைகளுமல்ல-சோற்றாலடித்த பிண்டங்களுமல்ல, என்பதை மட்டும் 'அகில உலகப் பார்வை, பெற்றுள்ள அமெரிக்க ஆசிரியர் அறிந்துகொள்ள வேண்டும். முதலில்டாலர் படையெடுப்பு—ஓர் பொன் விலங்கு! இரண்டாவது பிரசார படை எடுப்பு—ஓர் சாட்டை! அடுத்தபடையெடுப்பு எதுவோ! எப்பொழுதோ!

# ஆகாத வேலைக்கு - - அம்பேத்கார் தளபதி

## சமஸ்கிருதக்காரர்களின் சூழ்ச்சி

சமஸ்கிருதமெனப்படும் இலக்கண வரம்பற்ற வட மொழியை இந்திய அரசாங்க மொழியாக ஆக்கிவிடவேண்டுமென்னும் முயற்சி மிக வன்மையாக நடைபெறுகிறதென்று தெரிகிறது.

சமஸ்கிருதத்தைத் தங்கள் தாய்மொழி என்றும், தேவ பாடை என்றும் கூறிக்கொள்பவர்கள் அம்மொழியை அரசாங்க மொழியாக்க வேண்டுமென்று தாங்களே கூறுவது கூடாதென்னும் கருத்துடன் இம்முயற்சிக்குப் பன்மொழிப் புலவரான டாக்டர் அம்பேத்காரைத் தளபதியாக்கியுள்ளனர்.

டாக்டர் தலைமையில், இந்திய அரசாங்க மொழி சமஸ்கிருதமாக இருக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் அண்மையில அ. நி. சபையில் கொண்டுவரப்படவிருக்கிறது.

இத்திருத்தத்தை ஆதரித்துக் கையொப்பமிட்டுள்ள இரண்டு மாதர் உள்ளிட்ட 16 பேர்களுள், வி. ஐ. முனிசாமிப்பிள்ளை, திருமதி தாக்ஷாயணி வேலாயுதம், டாக்டர் பி சுப்பராயன் உட்பட 10 பேர் சென்னை மாகாணத்தவர். நஜிருத்தின் அஹமது என்ற சாஹிபு ஒருவரும் இதை ஆதரிக்கிறார். எப்படி ஆதரவு?

செத்துப்போன மொழியென முடிவு கட்டப்பட்ட இவ்வட மொழியைத்திணிக்க ஏன் இந்தப் பெரும் முயற்சியும், திரைமறைவுச் சூழ்ச்சிகளும் நடத்திக்கொண்டிருக்க வேண்டும்?

சமஸ்கிருதக் கலை என்றால், மக்களிடை உயர்வு தாழ்வு கற்பித்து, மூட நம்பிக்கையை வளர்க்கும் தத்துவங்களைப்பெருவாரியாகப்போதிக்கும் இலக்கியங்களைப் பரப்புவது என்பது தானே?

இதனைப் பரப்பவா மக்களை மீண்டும் கீழ் நிலைக்குக் கொண்டு போகவா இந்த முயற்சிகள்?

## பக்தர்களுக்குப் பெருமாள் சோதனை!

### கடவுளைத்தரிசிக்க வந்தவிடத்தில் களவும் மரணமும்

இரங்கூன் வைரவணிகர் ஒருவர் திருப்பதி பெருமாளைத்தரிசிப்பதற்காகத் திருப்பதிக்கு யாத்திரை சென்ற இடத்தில் அவரிடமிருந்த ரூ. 2000-ரொக்கமும் ரூ. 8000 மதிப்புள்ள இரங்கூன் வைரங்களும் களவு போயினவாம்.

ஒருவர் மலைமீது சென்று பெருமாளைச் சேவித்து விட்டுத் திரும்பி வந்து சத்திரத்தில் தங்கியிருக்கையில் திடீரென்று மரணமடைந்தாராம்.

ஒருவர் பெருமாளிருக்கும் தலத்தில் பொருளைப் பறி கொடுத்தார். அதே தலத்தில் அப்பொருளை ஒருவர் பெற்றார். ஒருவர் இழக்கவும் மற்றவர் பெறவும் அப்பெருமாளே அன்றோ காரணம்! பறிகொடுத்தவர் இதுவும் பெருமாளின் சோதனையோ என்றலைக, பொருளைக்களவாடியவர், "கடவுள் கண்டுமா காட்டும்" என்று கூறிக்களவாடிச் சென்று மகிழ, கள்வனைக் கண்டு பிடிப்பதற்காகப் போலீசார் ஓடியாடி உழைக்க, இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு பெருமாள் கல் போல் அசையாமல் வீற்றிருக்க, இப்படிப்பட்ட நிலைமைகள், களவு போவது, காணமற் போவது, நோய்களுக்காளவது, திடீரென்று மரணமடைவது போன்ற சம்பவங்கள் இருந்தும் மக்கள் தலயாத்திரைகளுக்குப் போய்க் கொண்டேயிருக்க, நம் நாட்டு நிலை இவ்வளவு இழிந்து விட்டதே, பேரின்னல்களுக்குக் காரணமாயுள்ள இவற்றையெல்லாம் கடவுளாக நம்பி மக்கள் மூட நம்பிக்கையில் மூழ்கிப்பாழாகின்றனரே என்று அறிஞர்கள் வருந்தவுமான நிலைமை நம்நாட்டினை விட்டு என்றுதான் ஒழியுமோ!

## இன்ஸ்பெக்டர் வழிகாட்டுகிறார்!

திருமங்கலம், செப். 9.

இவ்வூர் மதுவிலக்கு சப்இன்ஸ்பெக்டர் ராஜாராம் என்பவர் இன்று ரயில்வே நிலயத்தில், ஐந்து புட்டிகள்கொண்ட சாராயத்தைத் கொண்டு வந்ததற்காக, போலீஸாரால் கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனில்வைக்கப்பட்டு இருக்கிறார். ஜனங்கள் ஏராளமாகஸ்டேஷனுக்குசென்று பார்த்து வருகிறார்கள். ராமராஜ்யத்தில் இவர் வழிகாட்டுகிறார் என்று ஜனங்கள்பேசிக்கொண்டு செல்கிறார்கள், எனத் திருமங்கலம் திராவிடர் கழக அனுதாபி ஒருவர் எழுதுகிறார்.

# ஸி. அப்துல் ஹகீம் இந்து-முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி

## மாணவர் தமிழ்க் கழகத் திறப்பு விழா

### தோழர் அன்பழகன் சொற்பொழிவு

சென்னை, செப். 8—

2—9—49 வெள்ளி மாலை 4-30-மணிக்கு, மேற்படி உயர்நிலைப்பள்ளி மாணவர் தமிழ்க் கழகத்தின் துவக்க விழாச் சொற்பொழிவு, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், க. அன்பழகன் எம். ஏ. அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

விழாவின் தொடக்கத்தில், அப்பள்ளியின் தலைமைத் தமிழ் ஆசிரியர் புலவர். பு. செல்வராஜ் அவர்கள், தோழர் அன்பழகன் அவர்களின் பணியினைப் பாராட்டி வரவேற்று, துவக்குவிழாச் சொற்பொழி வாற்றக் கேட்டுக் கொண்டார்கள். பள்ளி மாணவர்கள் அனைவரும், ஆசிரியர்களும், பிறரும் குழுமியிருந்தனர்.

தோழர், அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், இந்த உயர்நிலைப்பள்ளியின் பெயரே—மதவேறுபாட்டை ஒழித்து ஒற்றுமையைக் காணும் நோக்குடன் அமைந்துள்ள தென்றும், இத்தகைய பள்ளியிலே பயிலுகின்ற சிறுவர்கள் தான், விரிந்த உள்ளத்தோடு உலவ முடியுமென்றும், எனவே இங்குத் தமிழ்ப் பண்பாடு தழைக்க முடியும் எனத் தாம் நம்புவதாகவும், அதனாலேயே இத்துவக்கவிழாவில் கலந்து கொள்வது பற்றி மகிழ்வதாகவும் தெரிவித்தார்.

மேலும், தமிழ்ப்பண்பாட்டோடு தொடர்பு கொண்டு பார்த்தால், இந்நாட்டில் யாரும் இந்துவல்ல என்பதும், யாரும் 'முஸ்லிம்' என்பதனாலேயே வேறு மதத்தார் என்று எண்ண இடமில்லை என்பதும் விளங்குவதோடு உண்மையான தமிழ்ப் பண்பாடு மதவேறுபாடற்ற கொள்கைகள் அளவிலேயே பற்பல நெறிகளைப் பின்பற்றுவதாகும் என்பதும் தெளிவாகும். இங்கிலையில்-தமிழைப் பயிலப் பயில-நம்மிடையே உள்ள வேற்றுமைக்கான அடையாளங்களைக் குறைத்துக்கொள்ள, புறத்தோற்றத்தில் பிரித்தறிய முடியாத நிலையை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். இங்குப் பயிலுகின்ற இளைஞர்கள் கலந்தே வாழ்கின்றனர். ஒரு முஸ்லிம், ஒரு வைணவன், ஒரு சைவன் என இப்படியே எல்லோரும் கலந்து உரைகின்றீர்கள். இந்நிலை நாட்டிலே, ஊரிலே, தெருவிலே, வீட்டிலே இல்லை. அதைப்போலவே, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற சாதிப் பாகுபாடும் நம்மிடம் நிலவுகின்றது இவற்றால் விளையும் தீமைகளோ துயரங்களோ பலப்பல. நாடு, கேடு அடைவதற்கே காரணமாகின்றன இவை. இவற்றை நீக்கத்தான் தமிழ்ப்பண்பாட்டை உணர வேண்டும். அதற்குத் தமிழைப் பயில வேண்டும். சங்க இலக்கியங்களின் கருத்துக்களை-குறள் நெறியைக் கற்க, கற்றபடி நிற்கமுயலவேண்டும். நமது சிறுவர்கள், பகுத்தறிவோடு சிந்தித்து உண்மையானவற்றையே ஏற்றுக்கொண்டு, பிறவற்றை விலக்க முற்படுவார்களானால், இறுதியில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நற்கருத்துக்களை மனதிற் கொள்ளமுடியும்'' எனப் பலப்பல விளக்கங்களுடன் சுமார் 1½ மணிநேரம் சொற்பொழிவாற்றி இத்தக்கழகம் அத்தகைய நோக்கத்துடன் பணியாற்ற வேண்டுமெனக் கூறித்துவக்கி வைத்தார்கள்.

மாணவர் தமிழ்க்கழகச் செயலாளர் நன்றிகூறத் தமிழ் வாழ்த்துடன், மாலை 6-மணிக்கு விழா இனிது முடிந்தது.

## வடிகட்டிய வகுப்பு வாத மல்லவா இது?

### தேசிய அரசாங்கம் என்ன செய்கிறது?

வாகூர் கிராம (தஞ்சை தாலுக்கா) வெங்கடேசப்பெருமாள் கோயிலில் பிற வகுப்பினரை அனுமதிக்கக்கூடாதென்று தடையுத்தரவு கோரி 3 பார்ப்பனர்கள் திருவையாறு நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

கோயில், மக்களனைவரும் ஆண்டவனை வணங்கவுள்ள இடம் எனக் கருதப்படுகிறது. ஆனால் அதில் மக்களுட் சிலர் போக உரிமை இல்லையென்று தடுக்குமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவானேன்? உரிமை இல்லை என்று சிலரைத் தடை செய்வதே வகுப்புவாதமல்லவா? இந்த வகுப்புவாத உரிமைப் பேச்சை, பிற மக்கள் உரிமையைத் தடை செய்ய அனுமதி கோருவதை மதச சார்பற்ற—உயர்வு தாழ்வு கருதாத அரசாங்கம் எப்படிச் சகிக்கிறது? அமைச்சர் பரமேஸ்வரனார், சபாநாயகர் சிவசண்முகனார், கந்தனார் மடமுனி முதலியோர் என்ன செய்துகொண்டிருக்கின்றனர்? தடை அனுமதி கோரி வழக்குத் தொடர்வதே, ஒரு வகுப்பாரைப் பழிப்பது ஆகவில்லையா? எந்த நீதிஸ்தலம் குறுக்கிட்டாலும், சுப்ரீம் கோர்ட் குறுக்கிட்டாலும் அவற்றிற்செல்லாமகட்டுப்படாமல், அவற்றின் தீர்ப்பைச சட்டை செய்யாமல் ஜமீன்களை ஒழித்தே தீருவோம் என்ற வீர உரை பகன்ற பண்டிதரின் அரசாங்கம், இது போன்ற மக்களை மக்கள் பிரித்து வைக்கும் கொடுமையினையும், உயர்வு தாழ்வு கருதும் நிலைமையினையும் ஒரேயடியாக ஒழித்துக்கட்ட, ஜமீன் ஒழிப்பில் காட்டும் வீரத்தையே ஏன் காட்டக்கூடாது?

## மகரிஷிகள் கூட்டம் மலிந்து விட்டது

### பஞ்சமும் நோயும் பெருகிவிட்டன

நம்நாட்டில் இப்போது மகரிஷிகளுக்கும் பகவான்களுக்கும் பஞ்சமில்லை. பகவான் ரமணர், மகரிஷி அரவிந்தயோகி, மஹாபுருஷர் ராமதாஸ்சுவாமி, லோககுரு சங்கராசாரி, மகரிஷி கோவிந்தாசாரி, மகரிஷி வ. வே. சு. ஐயர் இப்படியாக இருப்பவர்களும் போனவர்களுமாகப் பல மகரிஷிகள் இங்கு மலிந்து விட்டனர்.

மகரிஷிகள் கூட்டம் மலிந்து பகவான்களுக்கும் பஞ்சமில்லாமற் போகவே, நாட்டில் உணவுப் பஞ்சமும் அறிவுப்பஞ்சமும் பிறபஞ்சங்களும் நோய்களும் தலைவிரித்தாடத் தொடங்கி மக்களின் வாழ்க்கையைப் பெரும் பஞ்சத்திற்குள்ளாகிவிட்டன.

மகரிஷிகளோ, பகவான்களோ தங்களைத் தரிசிக்க வருபவர்களுக்குத் தரிசனம் தருவதோடு தங்கள் கடமையை முடித்துக் கொண்டு, எப்பஞ்சமும் நெருங்காத தங்களிருப்பிடங்களில், தேவவாழ்வில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நமநாட்டின் நிலை இப்படியா பாழாகிப் போகவேண்டும்!

## கடந்த 2 ஆண்டுகளாக அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை

### அமைச்சர் தரும் தகவல்

''கடந்த 2 ஆண்டுகளில் அரசாங்கத்தாரின் கவனம் வேறு விஷயங்களில் திரும்பி விட்டன. அதனால் உணவு உற்பத்திப் பிரச்னையில் போதிய கவனம் செலுத்த முடியவில்லை...... விவசாயிகளுக்கு உரம், இரும்புச்சாமான்கள் முதலியவற்றை விநியோகம் செய்வதில் அரசாங்க ஸ்தாபனங்கள் போதிய பயிற்சிபெறவில்லை''

இது உணவு அமைச்சர் சென்னை எழும்பூரில் பேசியது.

நகரம் தீப்பற்றி எரிகையில் நீரோ மன்னன் யாழிசை எழுப்பி அதில் லயித்து மகிழ்ந்தானும் அதுபோல, மக்கள் பசி பசியென்று கதறிக் கொண்டிருக்கையில், அரசாங்கத்தின் கவனம் வேறுபக்கம் திரும்புகிறது. இப்போது, வள்ளிக் கிழங்கையும வாழைப்பழத்தையும் தின்னுமாறு பிரசாரம் செய்வதில் திரும்புகிறது. இன்னும் எவ்வெவ் வழியில் திரும்புமோ! மக்கள் ஆட்சி மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகளால் நடப்பதாகக் கூறிக் கொள்ளப்படும் நாட்டில், உணவில்லாக் காலத்தில், அரசாங்கத்தின் கவனம் எங்கெங்கோ வேறு பக்கங்களில் திரும்புவதும் ஒரு விந்தைதான்.

## சென்னையில் ஏன் இல்லை?

உணவுப் பயிர்கள் பூச்சி பிடித்து அழிவதைத் தடை செய்ய ''கம்மெக்ஸேன் டஸ்ட் டி. 025'' என்ற மருந்து நன்கு பயன்படுகிறதாம். இம மருந்துகளைப் பயிர்கள்மீது தூவுவதன் மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்த பயிர்கள் சென்னை மாகாணத்தில் பூச்சிகளால் அழிக்கப்படாமல் காப்பாற்றப் பட்டனவென்று விவசாய இலாக்கா அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த மருந்து, பயிர்களைப் பூச்சிகள் அரித்து விடாதபடி தடுக்க மிகச் சிறந்தது என்பதை நடைமுறையில் பரீட்சித்துப் பார்த்தாகி விட்டதாம். இப்படிப்பட்ட அருமையான மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை இப்போது பமபாயிலிருக்கிறதாம். மற்றொரு பெரிய தொழிற்சாலையைக் கல்கத்தாவில் கட்ட ஏற்பாடு நடைபெற்றுவருகிறதெனத் தெரிகிறது. ஆனால் சென்னையிலேலா!

சென்னை மாகாணம் விவசாயத்தில் மற்ற வற்றைவிட முதலிடம பெற்று விளங்குவதுதான். ஆனால் விவசாய சம்பந்தமான பொருள்களுக்குப்பிற மாகாணங்களை எதிர்பார்க்க வேண்டியதுதான். இந்த மருந்து உற்பத்தியைச் சென்னையில் செய்ய, சென்னை அரசாங்கம் முயலக்கூடாதா? கவனத்தை இதில் திருப்ப, வேறுபுறம கவனம் திருப்பும அமைச்சர்கள் முன் வருவார்களா?

## பதிவுத் திருமணம்

ஆலத்துடையான்பட்டி, செப். 7—

ஆலத்துடையான்பட்டி (முசிறி தாலுக்கா) தோழர் சிங்காரத்திற்கும், துறையூருக்கு அடுத்த வாலீஸ்புரத்தில் இருக்கும் செல்லம்மாளுக்கும் திருச்சி ரிஜிஸ்தர் ஆபிஸில் 6-9-49-ம் நாள் பதிவுத் திருமணம் நடந்தது. இதன் நினைவாக ''மாலைமணி''க்கு ரூ. 1-0-0 அளிக்கப்பட்டது. எனத் தோழர் எ. குருவேல் எழுதுகிறார். ரூ. 1-0-0 வரப்பெற்றோம். மகிழ்ச்சி —(ஆ-ர்).

# திராவிடர் இயக்கப் பொதுக்கூட்டம்

## திராவிடத்தின் எதிர்கால வேலைத்திட்டம் பற்றி

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில்

தோழர்கள்:

| | |
|---|---|
| பாரதிதாசன் | N. ஜீவரத்தினம் |
| C. N. அண்ணாதுரை | C. P. சின்னராஜ் |
| A. V. P. ஆசைத்தம்பி | தங்கப்பழம் |
| K. V. K. சாமி | E. V. A. வள்ளிமுத்து |
| A. சித்தையன் | மதுரைமுத்து |
| பராங்குசம் | N. M. சுப்ரமண்யம் |
| K. K. நீலமேகம் | C. D. T. அரசு |
| E. V. K. சம்பத் | மணிமொழியார் |
| S. R. சுப்ரமண்யம் | சத்தியவாணிமுத்து |
| N. V. நடராஜன் | K. A. மதியழகன் |
| காஞ்சி. கல்யாணசுந்தரம் | முருகு. சுப்ரமண்யம் |
| R. நெடுஞ்செழியன் | M. S. மொய்தீன் |
| M. K. T. சுப்பிரமணியம் | K. அன்பழகன் |
| T. K. சீனிவாசன் | M. கருணாநிதி |

ஆகியோர் பேசுவார்கள்

இடம்:-சென்னை ராயபுரம் ராபின்ஸன் பார்க்.

காலம்:-18-9-49 ஞாயிறு மாலை 4-மணிக்கு

K. கோவிந்தசாமி, அமைப்பாளர்.

## ஆசிரமத்தின் அலங்கோலம்

### மகரிஷி தலைமையில் விபசார விடுதி

நாகபுரியில் அகோலா சனாதன ஜெயின் விதவா ஆசிரமம் என்ற பெயரால், வாலிப பெண்களை மயக்கி ஆசிரமத்தில் சேர்த்துப் பின்னர் விபசாரத்திலீடுபடுத்தியதாக ஆசிரமத்தலைவர், அவர்மனைவி ஏஜெண்டுகள், வேலைக்காரர் முதலியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆசிரமரிஷி ஏஜெண்டுகளை வைத்து வெளியிடங்களிலிருந்து பெண்களை ஏமாற்றி அழைத்து வந்து ஆசிரமத்தில் சேர்ப்பாராம. விதவைகள், அனாதைகளையும் சேர்த்துக் கொள்வாராம். பிறகு பணக்காரக்கணவர்களுக்கு இப்பெண்களைப் பெருந்தொகைக்கு விற்று விடுவது வழக்கம். ஆசிரமரிஷியின் போதனையில் சிக்கிய அப்பெண்கள் இரண்டு மூன்று மாதங்கள் அக்கணவர்களுடனிருந்த பின் நகைகள், கையில் கிடைத்த பணம், முதலியவற்றுடன் சந்தடியின்றி ஆசிரமத்துக்குவந்து விடவேண்டும் இப்படியாக ஒரே பெண் நான்கைந்து கணவர்களுக்கு மனைவியாகும் ஆசிரம வாசிகளும் உளர். இந்த வாணிகத்தில் மகரிஷி லட்சாதிபதியானார். ஆனால் போலீசார் மகரிஷி யென்று கூடக் கருதாமல் இவரைக் கண்டோடு கைது செய்துவிட்டனர்.

ஆசிரமம், யோகம், மகரிஷி என்னும் பெரிய பெயர்களையுடைய இடங்களில் என்னதான் நடந்தாலும் அவை ''தெய்வப் பிரீதி'' அல்லவா? போலீசாருக்கு இது தெரியவில்லை. ஒழுக்கக்கேடு என்று கைது செய்து விட்டனர் போலும்!

## வாட்டும் வறுமை புரியும் கொடுமை

நிஜாம் ரயில்வேயில் பாயிண்ட்ஸ்மன் வேலை பெறச் சென்றுகொண்டிருந்த வெங்கையா என்பவனை வறுமையின் கொடுமையைத் தாங்க முடியாத ஒருவன் மயக்க மூட்டிக் குழியில் தள்ளிக் கொன்றுவிட்டுத் தானே வெங்கையா என்று ரயில்வே அதிகாரிகளிடம் பொய் கூறி வேலை பெற்றான்.

பசிக் கொடுமை தாங்க முடியாத மற்றொருவன் மூளை கெட்டுத் தன் உறவினர்களையும் தன் எதிரில்பட்ட பல குழந்தைகளையும் பெரியவர்களையும வாழ வகையில்லா இவ்வுலகில் என் உயிருடன் வாழ்கின்றீர்கள் என்ற கருத்துடன் வெட்டிக் கொன்றான்.

இவ்வண்ணம் வாழ வகையின்றி, வறுமைக் கொடுமையை தாங்க வழியின்றி, பிறரைக் கொன்றும, களவாடியும், சூதுவாதுகள் செய்தும், தாங்களே தற்கொலை செய்து கொண்டும் விலங்குத் தன்மைக்கு ஆளான மக்களின் தொகை எவ்வளவோ!

நாட்டில் வறுமையால் இத்தகைய இழிநிலை ஏற்படுவதை விலக்க, மக்கள் விலங்குத் தன்மைக்குப் போகாதபடி தடுத்து, உயர் நிலை அடையும் வழிகாட்ட அரசாங்கத்திடம் நடைமுறை வேலை திட்டம் இருக்கிறதா? இவர்களைக் கைது செய்துவிட்டால் போதுமா?

அறிவிப்பு

ரெஜிஸ்டர்டு மூட்டை பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கும். அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

# நியமன முறை தீது...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

செய்வதை, இன்று காங்கிரஸ் ஆளவந்தார்கள் அறவே ஒழித்து விட்டார்களா? இல்லை-இல்லை-முக்காலும் இல்லை!

திருச்சி ஜில்லா போர்டின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 52. இதில், தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் 22 பேர்தான். சுயேச்சைவாதிகள் 27 பேர்களும், 3 சோஷலிஸ்டுகளும் உறுப்பினர்களாகியுள்ளார்கள். எனவே, காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் திருச்சி ஜில்லாபோர்டில் இருக்க முடியாது. ஆதிக்க வெறி கொண்ட ஆளவந்தார்கள், இதற்கு ஒரு தந்திரம் செய்து காங்கிரஸ் உறுப்பினர்கள் தொகையைக்கூட்ட யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதாவது திருச்சிஜில்லாவோடு இணைக்கப்பட்ட புதுக்கோட்டைச் சிற்றரசிலிருந்து 8 நபர்களை ஜில்லா போர்டுக்கு நியமிக்க—நாமிநேஷன் செய்யப்போகிறார்களாம். பிற்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்குத் தான் என்று, நியமன முறைக்குக் காரணம் கூறிற்றோ ஏகாதிபத்தியம், அது போல ஏதாவது காரணம் காட்டுகிறது காங்கிரஸ் ஆட்சி என்று கருதுகிறீர்களா, அதுதான் கிடையாது. அவர்கள் ஆங்கிலேயர்கள்—அன்னியர்கள். எனவே ஏதாவது பொருத்தினாலும் பொருந்தாமல்போனாலும் காரணம் காட்டவேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், ஆளவந்தார்கள்தான் 'நம்மவர்'களாயிற்றே.— இவர்களுக்குக் காரணம் காட்ட வேண்டிய தேவை எப்படி இருக்கமுடியும்?

நியமன முறையே தவறு, காங்கிரஸ் கட்சியினர், அன்னிய ஆட்சியில், கூறிவந்த கூற்றின்படி! அவ்வாறு நியமிக்கப்படுகிறவர்களும், பொது மக்களில் இருந்து நியமிக்கப்படுவார்கள் என்று கருதுகிறீர்களா? அந்தக் கெட்ட காரியத்தையா இந்த நல்லவர்கள் செய்வார்கள்! புதுக்கோட்டை காங்கிரஸ் கட்சியிலிருந்துதான் 8 நபர்களை ஜில்லா போர்டுக்கு நியமிக்க இருக்கிறதாம், சென்னைக் காங்கிரஸ் சர்க்கார்! ஆச்சரியப்படாதீர்கள்! இது என்ன நியாயம் என்று கேட்டுவிடாதீர்கள்! இது 'நம்மவர்' ஆட்சி! காந்திய வழியில் நடக்கும் சேவா உணர்ச்சியின் அடிப்படையில் எழுந்த ராமராஜ்யம் இது!

திருச்சி ஜில்லா போர்டுக்குத் தேர்தல் நடந்த பின்புதான், புதுக்கோட்டைத் தனி அரசு திருச்சியோடு இணைக்கப்படவில்லை. பல திங்கள் ஆகிறது அந்த இணைப்பு ஏற்பட்டு. திருச்சி ஜில்லா போர்டுக்குத் தேர்தல் நடந்த காலத்திலேயே, புதுக்கோட்டை நிலப்பரப்புக்கும் தேர்தலை வைத்திருக்கலாம். அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும், தேர்தலில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அளித்திருக்கலாம். இனியாவது தேர்தலை வைத்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கச் சந்தர்ப்பம் அளிக்கலாம். இது தான் ஜனநாயகக் கோட்பாடுமாகும். இந்த, மக்களை மதித்து நடக்கும் முறை ஆளவந்தார்களுக்குப் பிடிக்கவில்லை! எட்டியாக இருக்கிறது இது! திருச்சியில் ஏற்பட்ட தோல்வியின் அதிர்ச்சி, புதுக்கோட்டையிலும் தோல்வி கிடைத்தால் என்ன செய்வது என்ற சிந்தனையைக் கொடுத்திருக்கிறது ஆளவந்தார்களுக்கு. எனவே, திருச்சி ஜில்லாபோர்டு தலைமையைப் பிடிக்க, புதுக்கோட்டைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து 8 ஆட்களைப் பதவி எனும் கூலி கொடுத்து வாங்கி, ஜில்லாபோர்டுக்குள் பலவந்தமாகத் திணிக்கும் நோக்கம் கொண்டிருக்கிறது. ஜனநாயகக் கோட்பாடுகள் கொலைசெய்யப்படுகின்றன, ஆளவந்தார்களின் ஆதிக்க வெறி அந்த அளவுக்கு முற்றிப்போய் இருக்கிறது!

சென்னை சர்க்கார் ஜில்லா போர்டில் இந்தத் திருவிளையாடலைச் செய்கிறது என்றால், பம்பாய் சர்க்கார் ரொம்ப உயரப் போய், சட்ட சபைக்கே நியமனம் செய்யும் திருவிளையாடல் புரிகிறது.

அதாவது, பம்பாய் மாகாணத்தோடு இணைக்கப்பட்ட தக்காண சமஸ்தானங்களிலிருந்து சட்டசபைக்குச் சில உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள், அப்படி நியமனம் செய்யப்பட்டவர்களில், இரண்டு மந்திரிகளும் கூட இருக்கிறார்கள். ஜனநாயக நிழல்கூட இந்த நியமனத்தில் இருக்கவில்லை. ஆளும் கட்சிக்குப் பலம் தேடும் பேராசைதவிர இதில் நாட்டுமக்கள் நலந்தேடும் நற்பண்பு ஒன்றும் கிடையாது. மக்கள் பெயர் கூறி ஒருகட்சியின் எதேச்சாதிகாரத்திற்கு ஆக்கம் தேடுவதுதான் இதிலுள்ள உண்மை!

நியமன சட்டசபை உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ள சபையில் முன்வந்த பொழுது, சோஷலிஸ்டு உறுப்பினரான யூசுப் மெஹரலி, நியமன உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வதை எதிர்த்தார். இருந்தால் என்ன? உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் சடங்கு வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது.

சட்டசபை கூடுவதற்குமுன், சோஷலிஸ்டுகள் அதுவும் சம்பந்தப்பட்ட சமஸ்தானத்தைச் சேர்ந்த பொது மக்கள், இந்த நியமன முறையைக்கண்டித்து, ஊர்வலமாக வந்தனர். தடையை மீறினதாகக் குற்றம் சாட்டப் பெற்று 53 நபர்களுக்கு, நபர் ஒன்றுக்கு ஒரு நாள் சிறைவாசமும், ரூ. 15 அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒரு மாதச் சிறைவாசமும் தரப்பட்டிருக்கிறது, வழக்கை விசாரித்த நீதிபதியால். வாக்குரிமை கேட்ட மக்களுக்குக் கிடைத்த பரிசு இது!

"சட்டசபை உறுப்பினர்களை நியமனம் செய்வது ஜனநாயகத்தைக் கொலை செய்வதாகும்." என்று ஊர்வலத்தில் கோஷிக்கப்பட்டதாம். வேறு எப்படித்தான், தூங்கிக்கிடக்கும் மக்களை விழிக்கச் செய்து, ஆளவந்தார்களின் அளவு கடந்தசெயலைக் காணச்செய்வது!

## "மரணத் தொகை குறைந்தால் மக்கள் வாழ்வு கெடும்"

—நிதி நிபுணர்

### மக்களினப் பெருக்கத்தைத் தடுக்க வழி மரணந்தானா?

உலகில் அமைதியைப் பரப்பும் உலக இயக்க மாநாட்டில் (ஸ்விட்ஜர்லாந்தில்), அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொருளாதாரப் போராசிரியர் டாக்டர் எஸ். சந்திரசேகர் பேசுகையில், "வளரும் மக்கள் இனப்பிரச்னையை ஒழுங்காகத் தீர்க்காதவரை, ஆசியாவில் அமைதி நிலவியிருத்தல் முடியாத செயல்" என்று கூறிவிட்டு, "இந்தியாவில் மரணத் தொகையைக் குறைக்க நாங்கள் முயல்கின்றோம். மனித இனம் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலைதான் இது. ஆனால் மரணத்தொகையைக் குறைத்துவிட்டால், மக்களுடைய உணவுப் பிரச்னை இன்னும் மிகச் சிக்கலானதாக ஆகி விடும்"

என்று கூறியுள்ளார். தெளிவான மொழியில் கூறவேண்டுமானால் "மக்களினம் வளருகிறது; உணவு போதவில்லை; ஆகவே, மக்கள் அதிகமாகச் சாகவேண்டும்" என்பதுதானே!

மக்களினம் பெருகினால் மற்ற வசதிகளையும் பெருக்க வேண்டுவது ஆட்சிப்பீடம் ஏற்பவோர் கடமை என்பதை நன்கறிந்துள்ள மக்கள் வாழும் நாட்டிலே, டாக்டர் இந்த முறையைக் கூறினாரெனின் இதனை என்னென்பது!

மக்களினம் பெருகுவதைத் தடுக்க, கருத்தடை முறையை இந்த நாட்டு டாக்டர்கள் ஆராய்ந்து ஒழுங்கான வகையில் மக்களிடைப் பரப்பினால் என்ன? மரண விகிதத்தைத் தடுத்தால் அபாயம் என எண்ணி, மக்களை மாள விடுவதைவிட, பிறப்பையே கட்டுப் படுத்திவிடலாமல்லவா? என் டாக்டருக்கு இந்த எண்ணம் தோன்றவில்லை! கருத்தில் சனாதனம் குறுக்கிட்டதோ!

பிறப்புத் தொகையைக் குறைக்க நேரடியாகக் கருத்தடை முறையினைக் கைக்கொள்வதை விட்டு, கைத் தொழில்களில் மக்களை ஈடுபடுத்துவதன் மூலமும், மக்களை வெவ்வேறிடங்களுக்குக்குடியேற்றிவிடுவதன் மூலமும் நெருக்கடியைச் சமாளிக்க எண்ணுவது மிகச் சிறு பலனையே தருமெனினும் கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதையே ஒக்கும்.

### திராவிடர் கழகப் படிப்பகம் குடியேற்றம்

குடியேற்றம், செப். 6—1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான்காம் நாள் ஞாயிறு மாலை நான்கு மணிக்குக் குடியேற்றம் சந்தைப் பேட்டை திராவிடர் கழகப் படிப்பகத்தில் தோழர் பா. துரையரசு அவர்களின் தலைமையில் கழகம் கூடியது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானம்:— அடக்கு முறைகளை அஞ்சா நெஞ்சத் துணிவால்சிந்தூரனியாக்கி, தலைவரின்சொல்லைத் தட்டாமல் நீதிக்கும் நேர்மைக்கும் போராடி, எழுச்சியற்ற மக்களுக்கு எடுத்துக் கூறி-எழுச்சியுண்டாக்கியவர்களைச் சூழ்ச்சிக்காரர்கள்-சதிக்காரர்கள்-என்று வசைமாரி பொழியும் பெரியாரின் தலைவரின்-தலைமையின் கீழ்ப்பணியாற்ற இயலாதென்பதுடன் வேறு தலைவர் பொறுப் பேற்கும் வரை கழகப் பணியிலிருந்து விலகுவதாகத் தீர்மானிக்கப்பட்டது எனச் செயலாளர் எழுதுகிறார்.

# ஆசிரியருக்கு முடங்கல்

### கைத்தறியாளர் கஷ்டம்

ஐயா,

ஈரோடு தாலுக்காவை அடுத்த சென்னிமலைக் கிராமத்தில், சுமார் 5000 கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இந்த 5000 தறிக்காரரும் தினம் நெசவு செய்தால் தான் ஜீவனம் செய்ய வழி உடையவர்கள். இந்தநிலைமையில் இருந்து கொண்டு இருந்தவர்களுக்கு இந்த 6 மாத காலமாய் நெசவு இல்லாமல் படும் கஷ்டம்எழுதவோ, சொல்லவோ, முடியாது. ஒட்டிய வயிறும் வதங்கிய முகமும், கசங்கிய கண்ணும் கொண்டவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். கஷ்டமின்றி வாழ்ந்த ஊரில் பிழைக்க வழி இல்லாமல், பலகுடிகள், ஸ்ரீரங்கம், திருச்சி, தஞ்சாவூர், இந்த ஊர் பக்கம் குடிபோகிறார்கள். போய்க் கொண்டும், இருக்கிறார்கள் தறிக்காரர் என்ன கூலியானாலும்பாதகம் இல்லை அரை வயிற்றுக்கஞ்சியாவது குடித்துக்கொண்டு வாழ்ந்த ஊரிலே வாழ ஆசைதான். முதலாளிகளை, நூல் கேட்டால எந்தக் கூலிக்கும் நூல் கிடைக்கவில்லை. அவரவர் வசமும் அளவுக்கு மீறியசரக்கு கையில் தேங்கி நிற்கிறது. வெளியூர் ஏற்றுமதிஇல்லை. அதனால் கையில் உள்ள சரக்கு விலை போகவில்லை.

வேறு வேலை செய்து பிழைக்க வழி தெரியாத கைத்தறி நெசவாளிகள் படும் கஷ்டம கண்கொண்டு பார்க்க முடியாது. இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது, நெசவுப் பாட்டாளிக்கு. இதை உடனே ஆளவந்தார்கள் கவனித்துத் தக்க ஏற்பாடு செய்தால் தான், ஏழைப் பாட்டாளிகள் பிழைக்க முடியும். ஆளவந்தார்கள்இதைக்கவனியாமல் இருந்தால், மக்கள் நடமாடிய இடத்தில். பிணம நடமாட்டம் போல் பேச்சின்றிய உருவமும் எலும்புக் கூடும், அதன்மேல் சுருங்கிய தோலும், பாம்புப்புத்துப்போல் கண்ணின குழியும். இப்படி பயங்கர உருவம் தான் நடக்க நேரிடும். இந்த நிலையைப் போக்க சர்க்கார் முன்வருவார்களா?

பொ. ஆ. ப. கிருஷ்ணசாமி.
சென்னிமலை. 8-9-49

### வன்னியர் நிலை

"வன்னிய குல க்ஷத்திரியர்களை" கீழ்ப்பட்ட வகுப்பினர்களுடைய பட்டியலிலிருந்து சென்னை சர்க்கார் நீக்கியுள்ளதாகத் தங்களுடைய தலையங்கம் மூலம் அறிந்து பதறிப் போனேன். சென்னை சர்க்காருக்குப் புத்தி மாறாட்டமா, அல்லது நிலை கலங்கிப்போயுள்ளதாஎன்று தெரியவில்லை. வன்னியர்கள் வாழ்க்கை வளமடையவில்லை — ஹரிஜனத் தோழர்களுடைய நிலைக்குத்தான் இருந்துவருகிறது. திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள வன்னியர்களின்நிலையை இந்த 'மதி'மந்திரிகளில் எவராவது நேரில் சென்று அறிந்தால், அவர்களுடைய நிலை தெரியவரும். யாவரும பாட்டாளிகள்; படிப்பு வாசனை அறியாதவர்கள். எங்கோ ஓரிருவர் தான் தற்பொழுது தலைதூக்கி வருகின்றனர்.

காங்கிரஸ் சர்க்காரிடம் வன்னியர்களுக்கு இருந்த கொஞ்ச மதிப்பையும, இந்த மதிமிக்க சர்க்கார இழந்து விட்டனர். கண்ணிய மிக்க சர்க்காரினுடைய செயலல்ல இது.

இந்தக் காலத்தில் பாட்டாளி, ஏழை வன்னியர்கள், முழுச்சம்பளம் கட்டி அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதென்றால்? அப்பப்பா...அந்தக் கஷ்டத்தினைத் தறபோதைய மதிமந்திரிகளில் யாராவது அனுபவித்தால தான் தெரியும.

சைதாப்பேட்டை 7—9—49 } தனமணி.

### குடந்தையில் நிர்வாணசாமியார்

குடந்தையில் சுமார் 45 வயது உள்ள ஓர் ஆண் சாமியார், உடம்பில் சிறிது துணிகூட யில்லாமல், தெரு வழியே போய்க்கொண்டு இருக்கிறார். டிசாமியார் இவ்வாறு ஒரு மாதகாலமாய் அலைந்து கொண்டிருக்கிறார். இதைப்பற்றிபோலீசார் இன்று வரையில், யாதொரு விதமான நடவடிக்கையும எடுக்கவில்லை. டி யார் அவ்விதம் போவதால், ஊரில் வெகு ஆபாசமாகவும், ஆண்வர்க்கத்திற்கு மிகவும் கேவலமாகவும இருக்கிறது. இதை உடனே குடந்தை நகர போலீசார், கவனிப்பார்களா? நான் பல நாள் வரையில், இதற்கு வழியுண்டாகும் என்று எதிர்பாரதேன். மிகவும் தாழ்மையுடன் போலீசாரைக் கேட்டுக்கொள்கிறேன் டி யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று.

T. கோவிந்தராஜன்
குடந்தை, 9—9—49

# மதச்சார்பற்ற அரசாங்கத்தில் மதக் கல்வி

நாட்டிலே நடைபெறுவது மதச்சார்பற்ற ஆட்சி என்கிறார் நாட்டின் முதலமைச்சர் நேரு. எல்லா மதங்களைச்சேர்ந்தவர்களும், எல்லாமக்களும் சமமாக மதிக்கப்படுவார்கள் என்கிறார் அதே முதலமைச்சர்.

ஆனால், சென்னைமாகாணத்தில், கல்வி நிலயங்களில் மதக் கலவி போதிப்பதைக்கல்லூரிகளில் ஊக்குதல் வேணடுமென்று, சென்னைப்பல்கலைக் கழகச சிண்டிகேட் நியமித்த சிறப்புக் கமிட்டி அறிவுரை கூறியிருக்கிறது.

பலமதங்கள் பரவியுள்ள இந்த நாட்டில, பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும "மத போதனைக்கு என்ன தேவை ஏற்பட்டு விட்டதோ தெரியவில்லை

கடந்த பல நூற்றாண்டுகளாக மதக் கலவி அளிக்கப்பட்டு வருவதன பலனாக, நாட்டில ஒழுக்கம் எவ்வளவு மேலோங்கியிருக்கிறது என்பதைப் பார்த்தாலே மதக கல்வியின பயனற்ற தன்மை நன்குவிளங்குகிற தன்றோ?

மனிதனை மனிதனாக மதித்து நடக்க வேண்டும; பொய், களவு, சூது, வஞ்சனை போன்ற தீய குணங்கள் ஒழிய வேண்டும் என்ற அடிப்படை நல்லொழுக்கத்தையே இந்த மதககல்வி பலநூறாண்டுகளாக மக்கள் மனதில பதியச செய்யமுடியவில்லை என்றால், இன்னும் அதை ஏன் கட்டியழவேண்டும்? மதக கலவி மக்களை அறிவை மங்கச செய்வதற்கும், சில கடவுள கதைகள் மக்களைத் தீநெறியில புகவைப்பதற்குந்தான பயன்பட்டன.

மேலும பல மதங்கள் பரவியுள்ள நாட்டில் எல்லா மதக்காரர்களும சமமாக மதிக்கப்படுவதெனின், எல்லா மதக் கல்விகளுக்கும இடமளிக்க நேர்ந்தால், மதக கல்வி போதித்தல் குழறுபடியான நிலைமையை உண்டாக்குவதைத் தவிர்த்து, மாணவர்கள் முன்னேற்றகூடிய பலன்கள் எதனையும காணமுடியாது என்பதைக் கல்வித்துறை அறிஞர்கள் கவனிப்பார்களா?

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45. Muthumari Chetty Street. Madras-1.